# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>அவசரக் கூட்ட அறிக்கை</u>

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 07–09–2018 வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் அவசரக் கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 07–09–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

## பொருள் எண் 1:

1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை IV வரி மற்றும் நிதி, விதி 8ன்படி நகராட்சிகளில் ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை சொத்து வரி சீராய்வு செய்யப்பட வேண்டும். அதன்படி கடைசியாக 2008ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ம் நாள் சொத்து வரி சீராய்வு செய்யப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 19.07.2018ல் மற்றும் அரசாணை (நிலை) எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018ன்படி 2018 ஏப்ரல் மாதம் 1ம் நாள் முதல் சொத்து வரி சீராய்வு செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

01.04.2008ல் சொத்து வரி சீராய்வு செய்ய 31.03.2008–ந்தேதிய நகர்மன்றத் தீர்மானம் எண் 25–ன்படி நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளையும் மூன்று மண்டலங்களாக ஏ, பி, சி என பிரிவு செய்து கீழ்க்கண்டவாறு ஒரு சதுர அடிக்கு மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

தற்போது 01.04.2018ல் நடைபெறவுள்ள பொது சொத்து வரி சீராய்விற்கும் ஏற்கனவே உள்ள வார்டுகள் மற்றும் மண்டலங்களை அடிப்படையாக கொண்டே சதுர அடிக்கான மதிப்பு நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் ஏ, பி, சி என மூன்று மண்டலங்களாக பிரித்து சதுரடிக்கு தொகை மறு நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள விபரம்.

| மண்டலம் | 01.04.2008ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை<br>ரூ.பை. | 01.04.2018ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை<br>ரூ.பை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஏ | 1.05 | 1.80 |
| பி | 0.55 | 1.20 |
| சி | 0.30 | 0.70 |

அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் : 19.07.2018 மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் : 26.07.2018 –ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.18 ம் தேதிய ந.க. 20555/18/ஆர்1 எண் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி குடியிருப்புகளுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாதவைகளுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திடவும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1 இந்நகராட்சியில் தற்போது சொத்துவரி மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து இந்நகர மக்களுக்கு செய்து கொடுக்கப்பட வேண்டிய குடிநீர் வசதி, மின்விளக்கு வசதி, சாலைகள் வசதி போன்ற அடிப்படை வசதி பணிகளுக்கு தேவையான நிதி வசதி குறைவாக உள்ளதால், மேற்படி அடிப்படை வசதிகளை தங்கு தடையின்றி நிறைவேற்றிட ஏதுவாக சொத்துவரி மூலம் கிடைக்கும் வருவாயை பெருக்கும் பொருட்டு 01.04.2018 முதல் செய்யப்பட வேண்டிய பொது சொத்துவரி சீராய்விற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சதுர அடி உயர்வுக்கான மண்டல அடிப்படை மதிப்புகளை (Zonal Basic Value) தொகையை நிர்ணயம் செய்யலாம்.

2. அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின்படி குடியிருப்புகளுக்கு 50 சதவிகிதமும் குடியிருப்பு அல்லாதவைகளுக்கு 100 சதவிகிதமும் சொத்துவரி உயர்வு செய்யலலாம்.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 01.04.2017 முதல் 31.03.2018 வரை ஏற்படுத்தப்பட்ட புதிய சொத்துவரி விதிப்புக்கள் மற்றும் மறு அளவீடு செய்து விதிக்கப்பட்ட சொத்துவரி விதிப்புகளிலும் எவ்வித மாறுதலும் செய்யப்பட வேண்டியதில்லை (No Revision)

01.04.2018 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்துவரிகளுக்கு அரசாணையின்படி மண்டல மதிப்பு (Zonal Value) உயர்வு செய்யப்படுவதால் மேற்படி சொத்து வரி விதிப்புகளுக்கும் உரிய கணக்கீட்டு தாள் தயார் செய்து உயர்த்தப்பட்ட சொத்துவரியில் வித்தியாசத் தொகையினை வசூல் செய்திடலாம்.

மேற்கண்டவாறு அடிப்படை மதிப்பு உயர்வு செய்யப்படுவது நாளிதழில் அறிவிப்பு வெளியிட்டு பொதுமக்களிடம் ஆலோசனைகள், ஆட்சேபனைகள் பெற்று மீளவும், மன்றத்திற்கு பொருள் வைத்து இறுதி செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2547/2018/அ1

## பொருள் எண் 2:

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 73 நாள் 19.7.2018 மற்றும் அரசாணை எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26.07.2018–ன்படி இந்நகராட்சியில் 1.4.2018ந்தேதி முதல் சொத்து வரி திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் (Guidelines) குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண் 20555/2018/ஆர்.1 நாள் 20.8.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும் தற்போது சொத்து வரி கணக்கீட்டிற்காக நடைமுறையில் இருந்து வரும் மூன்று மண்டலங்களில் (A, B, C) பகுப்பாய்வு செய்து சீராய்வு மேற்கொள்ள அமைக்கப்பட்டுள்ள குழுவினர் அளித்துள்ள பரிந்துரைகளின்படியும் கீழ்க்கண்டவாறு ஏற்கனவே உள்ள மண்டலங்களை அடிப்படையாக கொண்ட தெருக்களை எவ்வித மாற்றமும் செய்யாமல் கீழ்க்கண்டவாறு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>தற்போதுள்ள மண்டலங்கள் மற்றும் அமையும் தெருக்களின் விபரம்</u>**

| வார்டு எண் | வரிசை எண் | தெருக்களின் பெயர் | மண்டலம் Zone |
|---|---|---|---|
| 1. | 1 | மன்னார்குடி ரோடு (கதவு எண் 1 முதல் 123 வரை 124 முதல் 179பி வரை) | B |
| 2. | 1. | மன்னார்குடி ரோடு (கதவு எண் 24 முதல் 126 வரை) | B |
| | 2 | நெல்மிஷன் தெரு | B |
| 3. | 1. | கச்சேரி ரோடு | B |
| | 2. | வலத் தெரு | B |
| | 3. | குட்ஷெட் ஆ.தி.தெரு | C |
| | 4. | அகமுடையர் தெரு | B |
| 4. | 1. | எஸ்.ஐ.ஆர்.காம்பவுண்ட் | B |
| | 2. | பழைய எடத் தெரு | B |
| | 3. | ரயிலடித் தெரு | A |
| | 4. | கண்ணுத்தோப்பு தெரு | B |
| 5. | 1. | திருவாரூர் ரோடு | A |
| | 2. | செங்கமலத் தெரு | A |
| | 3. | ராமமடத் தெரு | A |
| | 4. | வடக்கு ராமமடத் தெரு | B |
| 6. | 1. | அரசலடி திராவிடர் தெரு | C |
| | 2. | வடபாதி திராவிடர் தெரு | C |
| | 3. | அரியலூர் திராவிடர் தெரு | C |
| | 4. | அரியலூர் தமிழர் தெரு | C |
| 7. | 1. | ஆஸ்பத்திரி தெரு | B |
| | 2. | தெற்கு ராமமடத் தெரு | B |
| 8. | 1. | டி.எம்.சி.ரோடு | A |
| | 2. | பொய் சொல்லா பிள்ளையார் கோவில் தெரு | B |
| | 3. | ஆஸ்பத்திரி சந்துதெரு | B |
| | 4. | கழுவமுள்ளி தெரு | B |
| | 5. | காந்தி முதலியார் நகர் | B |
| 9. | 1. | மேல வீதி | A |
| | 2. | சன்னதி தெரு | B |
| | 3. | வடக்கு வீதி | A |
| | 4. | கீழ வீதி | B |
| | 5. | தெற்கு வீதி | B |
| 10. | 1. | மேட்டுத் தெரு | B |
| | 2. | திருக்குளம் மேல்கரை | B |
| | 3. | திருக்குளம் வட கரை | B |
| | 4. | சண்முகம் செட்டித் தெரு | B |
| | 5. | கடைத் தெரு முழுவதும் | A |
| 11. | 1. | பாமணி ரோடு | B |
| | 2. | மீனாட்சி வாய்க்கால் தெரு | C |
| 12. | 1. | அபிஷேககட்டளை ஆதிதிராவிடர் தெரு | C |
| | 2. | காட்டு நாயக்கன் தெரு | C |
| | 3. | நாடார் தெரு | C |
| 13. | 1. | அபிஷேககட்டளை திராவிடர் தெரு | C |
| | 2. | தைக்கால் தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 14. | 1. | பொன்னையன் செட்டித் தெரு | B |
| 15. | 1. | தேளிக்குளம் பிள்ளையார் கோவில் தெரு | B |
| | 2. | பழைய சந்தைப்பேட்டை தெரு | B |
| | 3. | வாணக்காரத் தெரு | B |
| 16. | 1. | வேதை ரோடு | A |
| | 2. | சந்தைக்கொட்டகை தெரு | A |
| | 3. | ரொக்க குத்தகை ஆதிதிராவிடர் தெரு | C |
| | 4. | ரொக்க குத்தகை குடியானத் தெரு | C |
| | 5. | திருவாசல் தமிழர் தெரு | C |
| | 6. | திருவாசல் திராவிடர் தெரு | C |
| | 7. | திருவாசல் கோட்டகம் | C |
| 17. | 1. | தச்சன் குளம் மேல்கரை | B |
| | 2. | பாரதியார் தெரு | B |
| | 3. | குமரன் தெரு | B |
| | 4. | பூண்டுவெளி | C |
| | 5. | மணிகண்டேஸ்வரர் கோவில் தெரு | C |
| | 6. | சிங்களாந்தி தமிழர் தெரு | B |
| 18. | 1. | கச்சவராயன் திடல் தமிழர் தெரு | C |
| | 2. | சோத்திரியம் | C |
| | 3. | சிங்களாந்தி திராவிடர் தெரு | C |
| | 4. | சிங்களாந்தி ஆதிதிராவிடர் தெரு | C |
| | 5. | கச்சவராயன் ஆதிதிராவிடர் தெரு | C |
| 19. | 1. | முத்துப்பேட்டை ரோடு (லெவல் கிராசிங் தென்பகுதி) | B |
| | 2. | முத்துப்பேட்டை ரோடு ஆதிதிராவிடர் தெரு | C |
| 20. | 1. | திரௌபதையம்மன் கோவில் தெரு | B |
| | 2. | உப்புக்குளத் தெரு | B |
| | 3. | பண்டிதர் தெரு | B |
| 21. | 1. | முத்துப்பேட்டை ரோடு போர்டு ஹைஸ்கூல் வேதை ரோடு ரயில்வே லைன் வரை | A |
| | 2. | போர்டு ஹைஸ்கூல் பின்புறம் | B |
| | 3. | பெரியநாயகிபுரம் | B |
| 22. | 1. | ஜவுளிக்கடைத் தெரு | A |
| | 2. | முத்துப்பேட்டை ரோடு முதல் தெரு | A |
| | 3. | தெற்கு செட்டித் தெரு | B |
| | 4. | வளையல்காரத் தெரு | B |
| 23. | 1. | தட்டாரத் தெரு | B |
| . | 2. | வடக்கு செட்டித் தெரு | B |
| | 3. | சாமியப்பா நகர் | B |
| | 4. | நேரு சூன்லாய் காலணி | B |
| 24. | 1. | ரயிலடி திராவிடர் தெரு | C |
| | 2. | ரயிலடி ஆதிதிராவிடர் தெரு | C |
| | 3. | மன்னை ரஸ்தா எடத் தெரு | B |

**அலுவலக குறிப்பு**

01.04.2018–முதல் மண்டல வாரியாக உள்ள தெருக்களை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.2547/2018/அ1)**

## பொருள் எண் 3 :

இந்நகராட்சியின் வருவாய் நிதி 2018–19ன்கீழ் இந்நகராட்சிப் பகுதிகளிலுள்ள 6 பூங்காக்களுக்கு கம்பி அமைக்கும் பணி ரூ.7.36 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண் 367 நாள் 31.07.2018–ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 24.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மேற்படி பெறப்பட்ட கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | மதிப்பீடு | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. பை. | சதவீதம் குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1. | எஸ்.மங்கையர்கரசி | 603961.45 | 602326.50 | 0.27% குறைவு |
| 2. | எஸ்.மாரியம்மாள் | | 615343.00 | 1.88% அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.27% சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு. எஸ்.மங்கையர்கரசி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் ஏற்கலாம்.

**(ந.கஎண்.2662/2018/இ1)**

## பொருள் எண் 4 :

இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றிவரும் திருமதி.ஆர்.பங்கஜவள்ளி என்பவரும், துவாக்குடி

நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றிவரும் திருமதி.க. மங்கையர்கரசி க/பெ. கணேசன் திருத்துறைப்பூண்டி என்பவரும் தங்களது குடும்ப சூழ்நிலை காரணமாக பரஸ்பர பணியிட மாறுதல் வழங்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் அவர்களுக்கு பரிந்துரை செய்ய கேட்டுக்கொண்டுள்ளதற்கிணங்க உரிய பரிந்துரை அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மனுதாரர்களின் குடும்ப சூழ்நிலை காரணமாக பரஸ்பர பணியிட மாறுதல் வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் அவர்களுக்கு பரிந்துரைக்கலாம்.

**(ந.கஎண்.2337/2018/சி1)**

## பொருள் எண் 5 :

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பணிக்கு தேவையான கொசு ஒழிப்பு மருந்து ரெடிமிக்ஸர் 100 லிட்டர், கொசு உற்பத்தி தடுப்பு கொசு வலை பைகள் 4000 எண்ணிக்கை மக்கும் குப்பைகளை எளிதில் மக்கவைக்கும் கிரியா ஊக்கி மருந்து, EM சொலிஸன் 300 லிட்டர், பணியின் அவசர அவசியம் கருதி வாங்கிட வேண்டியுள்ளதால் உரிய ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.கஎண்.2944/2018/எச்1)**

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

.

## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>இயல்பு கூட்ட அறிக்கை</u>

திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 28–09–2018 வெள்ளிக் கிழமை மாலை 3.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்படும் இயல்பு கூட்ட அறிக்கை.

இடம்: திருத்துறைப்பூண்டி | தனி அலுவலர்,
நாள்: 28–09–2018 | திருத்துறைப்பூண்டி நகராட்சி.

### பொருள் எண் 1:

நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர்–2018 மாதத்தின் நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

### பொருள் எண் 2:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய உணவு விடுதி எண் 01–ன் குத்தகை காலம் 31.03.2018ஆம் தேதியுடன் முடிவுற்று மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற தினசரி வாடகை தொகையில் 15% உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி திருவாளர்கள் | தற்போதைய தினசரி வாடகை தொகை ரூ. | 15% உயர்வுக்குப் பின் தினசரி வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலைய உணவு விடுதி எண் 01 | வை.முருகேசன், த/பெ.வைத்திலிங்கம், 72ஜி.ஆஸ்பத்திரி தெரு, திருத்துறைப்பூண்டி | 697/– | 802/– |

**அலுவலக குறிப்பு:**

அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையினை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற தினசரி வாடகை தொகையில் 15% உயர்வு செய்து 01.04.2018 முதல் 31.03.2021 வரை அங்கீகரித்து வாடகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1476/2012/அ2)

## பொருள் எண் 3:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண் 02–ன் குத்தகை காலம் 31.03.2018ஆம் தேதியுடன் முடிவுற்று மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற தினசரி வாடகை தொகையில் 15% உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி திருவாளர்கள் | தற்போதைய தினசரி வாடகை தொகை ரூ. | 15% உயர்வுக்குப் பின் தினசரி வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலைய கடை எண் 01 | வி.ஆர்.சங்கீதா, க/பெ.ரவி, 14.திருத்துறைப்பூண்டி ரோடு, முத்துப்பேட்டை | 147/– | 169/– |

**அலுவலக குறிப்பு:**

அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையினை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற தினசரி வாடகை தொகையில் 15% உயர்வு செய்து 01.04.2018 முதல் 31.03.2021 வரை அங்கீகரித்து வாடகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1476/2012/அ2)

## பொருள் எண் 4:

திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண் 03–ன் குத்தகை காலம் 31.03.2018ஆம் தேதியுடன் முடிவுற்று மேற்படி கடையின் குத்தகைதாரர் செலுத்தி வரப்பெற்ற தினசரி வாடகை தொகையில் 15% உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை குத்தகை உரிமத்தினை புதுப்பித்து வழங்குமாறு வரப்பெற்ற விண்ணப்பத்தினை நகர்மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ. | குத்தகை இனம் | குத்தகைதாரர் பெயர் (ம) முகவரி திருவாளர்கள் | தற்போதைய தினசரி வாடகை தொகை ரூ. | 15% உயர்வுக்குப் பின் தினசரி வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | பழைய பேருந்து நிலைய கடை எண் 03 | வி.ஆர்.சங்கீதா, க/பெ.ரவி, 14.திருத்துறைப்பூண்டி ரோடு, முத்துப்பேட்டை | 133/– | 153/– |

**அலுவலக குறிப்பு:**

அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007–ல் வழங்கப்பட்டுள்ள அறிவுரையினை பின்பற்றி ஏற்கனவே செலுத்தி வரப்பெற்ற தினசரி வாடகை தொகையில் 15% உயர்வு செய்து 01.04.2018 முதல் 31.03.2021 வரை அங்கீகரித்து வாடகை தொகை நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1476/2012/அ2)

## பொருள் எண் 5:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018–19–ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34 அறிவிப்பு எண்.14–ல், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக்குறைந்த விலையில் வழங்கும் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதிற்கிணங்க திருத்துறைப்பூண்டி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம் ) வீதம் மொத்தம் 24 வார்டுகளில் ரூ.432.00 இலட்சம் (ரூபாய் நானூற்று முப்பத்தியிரண்டு இலட்சம் ) ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும், வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centre) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் 24 வார்டுகளிலும் செயல்படுத்தவும், இதற்கான அனுமதி நகராட்சி ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3285/2018/இ1

இடம்: திருத்துறைப்பூண்டி
நாள்: 29–08–2018

தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.